# இலக்கு

இதழ் 71

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

மார்ச் 29, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1





## கொரோனா வைரசும் உள்ளூர் அறிவு முறைமைகள் குறித்த அக்கறைகளும்

து.கௌரீஸ்வரன்


## நாங்கள் சூப்பர் ஹீரோக்கள் அல்ல, நாங்கள் புரட்சிகர மருத்துவர்கள்

சு.சுரபி



## பழந்தமிழ் இலக்கியமும் சமணமும்


ந. மாலதி




## 21 நாள் ஊரடங்கால் பாதிக்கப்படும் இந்திய மக்களின் பொருளாதாரம்

கல்யாணி

## ஆண்களை குறிவைத்துக் கொல்லும் கொரோனா






தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# அன்று அவர் நட்ட விதை இன்று முளைத்து நிற்க...

## அவரது நிழற்படம் தாங்கி அவர் மக்கள் வந்துள்ளார்கள்...



குதிரையில் சுருட்டுப் புகைத்தபடி வயல் வெளிகளெல்லாம் வலம் வந்து காடுமேடுகளில் நடந்து திரிந்து, நாடு ஒன்றை நாடாக நிமிரவைத்த பெரும்தலைவன்!


சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் இருவருக்கும் இடைப்பட்ட நீதி, அநீதியைச் சரி செய்து ஒரு தேசம் செய்த அந்த சுருட்டுக்காரனைத் தெரியாதவர் யாருமில்லை!

சுயமரியாதை என்பது தனிமனிதனிலிருந்து, தன்மானமுள்ள தேசம் வரை நிமிர்ந்து நிற்கச் செய்கின்ற அடையாளம் என்பதைத் தெரிய வைத்த தலைவர்களுள் என்றும் நிலைத்திருப்பவர்!

போகும் பாதை நீண்டதென்றும், போரிடும் எதிரி பலமானவன் என்றும் தெரிந்த தலைவனோடு, தோளோடு தோள் கொடுக்கத் தோழர்கள் இணைந்தார்கள், அனைவரிலும் பெரிய தோழனாய், தளபதியாய் சே எனும் மாபெரும் வீரரும் இணைந்து நின்றார்!

தொடர்ச்சி 10ம் பக்கம்

# மாபெரும் குற்றத்திற்கான நீதியை மறுத்துள்ளார் கோத்தா - மனித உரிமைகள் கண்காணிப்பகம்




சிறுவர்கள் உட்பட 8 தமிழ் மக்களை படுகொலை செய்த சிறீலங்கா இராணுவச் சிப்பாயான சுனில் ரட்நாயக்காவுக்கு மன்னிப்பு வழங்கியதன் மூலம் மாபெரும் குற்றத்திற்கு கிடைக்க வேண்டிய நீதியை மறுத்துள்ளார் சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா என அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

போரின் போது படையினர் மிகப்பெரும் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தாலும் சிறீலங்காவில் அவர்களுக்கு தண்டனை கிடைப்பது என்பது அரிதானது. ஒருசிலர் தண்டிக்கப்பட்டாலும், அவர்களும் விடுதலை செய்யப்படுவதுண்டு.

சிறீலங்காவின் நீதித்துறை அனைத்துலக தரமற்றது. எனவே சிறீலங்காவில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சிறீலங்கா அரசினால் நீதியை நிலைநாட்ட முடியாது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என

தொடர்ச்சி 10ம் பக்கம்

## கோவிட்-19 – மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 30,249



கொரோனா வைரசின் தாக்கத்தால் உலகில் உள்ள 177 நாடுகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை 30,249 இற்கும் அதிகமாகும் என ஜோன்ஸ் கொப்கின்ஸ் பல்கலைக்கழகம் நேற்று (28) தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் அதிகமானவர்கள் இத்தாலியை சேர்ந்தவர்கள். அங்கு 10,023 பேர் மரணமடைந்துள்ளதுடன், தினமும் ஏறத்தாள 800 பேர் அங்கு மரணமடைந்து வருகின்றனர். அங்கு

தொடர்ச்சி 10ம் பக்கம்

## ஐ.நா பணியாளர்கள் 86 பேர் கொரோனாவால் பாதிப்பு

கோவிட்-19 வைரசின் தாக்கத்திற்கு தமது பணியாளர்கள் 86 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை நேற்று (28) தெரிவித்துள்ளது.

ஆசியா, அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ள போதும் ஐரோப்பாவிலேயே அதிக பணியாளர்கள் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர் என ஐ.நாவின் பேச்சாளர் ஸ்ரீபேன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஸ்பெயினில் 9,444 சுகாதாரப் பணியாளர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று வரையில் அங்கு 5,000 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும், 65,700 பேர் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்



கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்து வருவ தால் சிறையில் உள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கு பல நாடுகள் திட்ட மிட்டு வருவது ஒருபுறம் இருக்க, சில நாடுகள் கைதிகளை விடுதலை செய்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையும் சிறு குற்றங்களில் ஈடுபட்ட கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் 85,000 கைதிகளை தற்காலிகமாக விடுதலை செய்துள்ளதுடன், 10,000 பேருக்கு பொது மன்னிப்பும் வழங்கியுள்ளது.

எதியோப்பியா 4,000 கைதிகளை விடுவித்துள்ளது.

இந்தியாவின் மாகாராட்ரா மாநில அரசு 11,000 கைதிகளையும், புதுடில்லி 3,000 கைதிகளையும் விடுவித்துள்ளது.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## இனப்படுகொலையாளியின் விடுதலை மாவைக்கு தெரியாதாம்



யாழ். மவாட்டம் மிருசுவில் பகுதியில் சிறுவர்கள் உட்பட 8 தமிழ் மக்களை படுகொலை செய்த குற்றச் சாட்டில் சிறீலங்கா உயர் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட சிறீலங்கா இராணுவச் சிப்பாயை சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா விடுதலை செய்தது தனக்கு தெரியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளதாக தமிழ் மிரர் என்ற ஊடகம் கடந்த வெள்ளிக் கிழமை (27) தெரிவித்துள்ளது.

அனைத்துலக மன்னிப்புச்சபை, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன இது தொடர்பில் உடனடியாக கண்டன அறிக்கைகள்

தொடர்ச்சி 10ம் பக்கம்

## சிறீலங்கா மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை - அனைத்துலக நீதியாளர் அமைப்பு

சிறீலங்கா இராணுவச் சிப்பாயான சுனில் ரட்நாயக்காவுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு என்பது சிறீலங்கா மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக அனைத்துலக நீதியாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இத்தகைய மன்னிப்பு என்பது அனைத்துலக நீதி விதிகளுக்கு முரணானது. எவ்வளவு பாரதூரமான குற்றங்களைச் செய்தாலும் படையினர் நீதிக்கு விதிவிலக்கானவர்கள் என்பதையே இது காட்டுகின்றது என அனைத்துலக நீதியாளர் அமைப்பின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பிரடெறிக் றவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் மீதான நீதிக்குப் புறம்பான படுகொலைகள் போன்ற தீவிர குற்றங்களுக்கு

தொடர்ச்சி 10ம் பக்கம்

## இலங்கையில் கொரோனா காலவரிசை வேண்டும் - மனோ

சீனாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாத நடுப்பகுதியில் பரவ ஆரம்பித்த தொற்று நோய் தொடர்பாக சீன அரசு உலக சுகாதார நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் அறிவித்திருந்தது.

இந்த நாள் முதல் இலங்கையில் முதலாவது மரணம் சம்பவித்த நேற்றைய (28) தினம் வரை இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களை காலவரிசைப்படுத்த (CHRONOLOGY) முயலுங்கள்.

அவ்வாறு செய்தால் பல உண்மைகள் வெளிவரும் என முன்னாள் அமைச்சரான மனோ கணேசன் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

## சிறீலங்காவில் முடங்கியுள்ள 15,000 சுற்றுலாப் பயணிகள்

சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்ட சுற்றுலாப் பயணிகளில் 15,000 பேர் தற்போதும் வெளியேற முடியாது தவித்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில் 2,131 பேர் சீனாவிலும், 2,386 பேர் இந்தியாவிலும், 1,570 பேர் ரஷ்யாவிலும், 1,200 பேர் ஜேர்மனியிலும், 1,159 பேர் பிரித்தானியாவிலும் இருந்து வந்தவர்கள்.

சிறீலங்காவில் தொடாந்து நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தினால் இவர்கள் வெளியேற முடியாது தவித்து வருகின்றனர். எனினும் இவர்களை வெளியேற்றும் முகமாக சிறீலங்கா அரசு சில விமான சேவைகளை எதிர்வரும் வாரம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சிறீலங்காவுக்கு 1.3 மில்லியன் டொலர்களை வழங்குகின்றது அமெரிக்கா

கொரோனா வைரஸ் இற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக சிறீலங்கா அரசுக்கு 1.3 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்காவின் வெளிவிவகார திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆய்வுகூடம் அமைத்தல், பாதிக்கப்பட்டவர்களை கண்காணித்தல், தொழில்நுட்ப நிபுணர்களை வைத்திருத்தல், நோய் தடுப்பு போன்ற காரணங்களுக்காக இந்த நிதி வழங்கப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சிறீலங்கா இராணுவத் தளபதிக்கு பயணத் தடையை அமெரிக்கா அண்மையில் விதித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்கா அரசின் இனஅழிப்பு ஆயுதமாகியது கொரோனா வைரஸ்



யாழ். மாவட்டம் மிருசுவில் பகுதியில் ஐந்து வயதுக் குழந்தை உட்பட 8 அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்த சிறீலங்கா இராணுவச் சிப்பாயை சிறீலங்கா அரசு விடுதலை செய்துள்ளது.

2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கு சென்ற தமிழ் மக்களையே சிறீலங்கா இராணுவம் கழுத்தை அறுத்து படுகொலை செய்திருந்தது.

சிங்களச் சிப்பாயின் இந்த நடவடிக்கைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தபோதும், தமிழ் மக்களை படுகொலை செய்த எந்த ஒரு சிப்பாயும் தண்டிக்கப்படுவதில்லை என்ற சிங்கள அரசின் கொள்கையை சிறீலங்கா அரசு நடைமுறைப்படுத்தியே வருகின்றது.

கொரோனா வைரசின் தாக்கத்தை தடுப்பதற்கு சிறைக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற ஐ.நாவின் கோரிக்கையை தனது இனவாத நடவடிக்கைக்கு பயன்படுத்தியுள்ளது சிறீலங்கா அரசு.

குற்றங்கள் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காது, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிங்களச் சிப்பாயை விடுவித்துள்ளது சிறீலங்கா அரசு.

### அனைத்துலக மன்னிப்புச் சபை கண்டனம்

சிறீலங்காவின் இந்த செயலை அனைத்துலக மன்னிப்புச் சபை கண்டித்துள்ளதுடன், சிறீலங்காவில் நீதி நிலைநாட்டப்படுவதில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் இன் தாக்கத்தை சிறீலங்கா அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருகின்றது எனவும் அது தெரிவித்துள்ளது.

### சிறீலங்காவில் நீதி நிலைநாட்டப்படுவதில்லை - ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு

படுகொலை குற்றவாளியை விடுதலை செய்யும் சிறீலங்கா அரசின் நடவடிக்கை அங்கு நீதி நிலைநாட்டப்படுவதில்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சிறீலங்கா அரசு வெளியிட்டுள்ள அறிக்கை மிகவும் பிரச்சனைக்குரியது. சிறீலங்கா நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட கொலைக் குற்றவாளியான இராணுவ அதிகாரி சுனில் ரட்நாயக்காவை சிறீலங்கா அரசு விடுத லை செய்வதாக அறிவித்துள்ளது.

ஐந்து இராணுவ வீரர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்ட போதும் ஒருவர் தான் தண்டிக்கப்பட்டார். ஆனால் அவரையும் சிறீலங்கா அரசு தற்போது விடுதலை செய்துள்ளது.

இது சிறீலங்காவில் நீதி நிலைநாட்டப்படுவதில்லை என்பதை காண்பித்துள்ளது. சிறீலங்காவின் இந்த நடவடிக்கை அங்கு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான விசாரணைகளின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளது என ஆணைக்குழுவின் பேச்சாளர் ரூபெட் கொல்விலே தெரிவித்துள்ளார்.

### தமிழ் அரசியல் கட்சிகள் கண்டனம்

சிறீலங்கா அரசின் இந்த இனவாத நடவடிக்கையை முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளான தமிழத் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் கண்டித்துள்ளன.

சிறீலங்காவின் இந்த நடவடிக்கையை தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் உறுப்பினருமான சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலக்கு

## கொரோனாவைச் சாட்டாக வைத்து நீதியையும் மனித உரிமையையும் அழிக்கும் சிறீலங்கா

கொரோனா வைரஸ் விளைவித்து வரும் மனித அவலங்களால் உலகே அரசியல் வேறுபாடுகளை மறந்து மனிதாயத்துடன் ஒருங்கிணைந்து மனிதாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து இணைந்து செயற்படுகின்றது. ஆனால் சிறீலங்கா மட்டும், மனிதாயத்திற்கு எதிரான குற்றமும், யுத்தக் குற்றமுமான, 5வயதுச் சிறுவரும் இரண்டு இளைஞர்களும் உட்பட எட்டுத் தமிழரை, அவர்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்ட தங்கள் கிட்டிய குடும்ப உறுப்பினர்களைத் தேடிச் சென்ற போது, இனஅழிப்புச் செய்தமைக்காகச், சிறீலங்கா நீதிமன்றத்தாலேயே 2015இல் மரணதண்டனை விதிக்கப்பட்ட தண்டனைக் குற்றவாளியான சிறிலங்கா இராணுவச் சிப்பாய் சுனில் ரட்நாயாக்காவை விடுவித்து, சட்டத்தின் ஆட்சியை கொரோனாவைச் சாட்டாக வைத்து தாங்கள் நினைத்தபடி தங்கள் கையில் எடுத்து நீதியையும் மனித உரிமையையும் அழித்துள்ளமை உலக அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. .

படுகொலை குற்றவாளியை விடுதலை செய்ததின் வழி சிறிலங்கா அரசு, அங்கு நீதியை நிலைநாட்டுவதில்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவின் பேச்சாளர் ரூபெட் கொல்வில் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியப் பிராந்தியப் பணிப்பாளர் மினாட்சி கங்குலி சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சிறிலங்காவால் நீதியை நிலைநாட்ட முடியாதென்று தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். போர்க் குற்றவாளி என ஐக்கிய நாடுகள் சபையால் அடையாளம் காணப்பட்ட சவீந்திர சில்வாவைப் இராணுவத் தளபதியாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மற்றொரு படை அதிகாரியான கமால் குணரட்ணாவை பாதுகாப்புச் செயலாளராகவும் நியமித்து இவர்களின் வழிநடத்துதலிலேயே தற்போதைய கொரோனா வைரஸ் தொடர்பான நடவடிக்கைக் குழுவையும் செயற்பட வைத்துள்ளமை சிறீலங்காவில் நீதியை நிலைநாட்டுவதற்கு அனைத்துலக நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்றின் தேவையைத் தெளிவுபடுத்தியுள்ளது எனவும் அவர் விளக்கியுள்ளார்.

அனைத்துலக நீதியாளர் அமைப்பின் ஆசிய மற்றும் பசுபிக்பிராந்தியப் பணிப்பாளர் பிரடெறிக் றவ்ஸ்கி அவர்களும் இத்தகைய மன்னிப்பு என்பது அனைத்துலக நீதி விதிகளுக்கு முரணானது. எவ்வளவு பாரதூரமான குற்றங்களைச் செய்தாலும் படையினர் நீதிக்கு விதிவிலக்கானவர்கள் என்பதையே இது காட்டுகின்றது. மக்கள் கொரோனா வைரஸ் இன் தாக்கம் தொடர்பான அச்சத்தில் உள்ளபோது அவர்களின் மனங்களை மேலும் பாதிக்கும் வண்ணம் இவ்விடுதலை அமைந்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கூடவே தான் அரச தலைவராகப் பதவியேற்றால் படையினர் எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற தனது உறுதி மொழியைத் தற்போதைய அரச தலைவர் நிறைவேற்றியுள்ளார் எனக் குறிப்பிட்ட அவர் சிறிலங்காவின் இந்த நடவடிக்கையைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளார்.

இவ்வாறாக உலகு சிறிலங்காவுக்கு தனது அதிருப்தியைத் தெரிவிக்கும் இந்நேரத்தில் இலங்கையின் நீதியரசராகவும், வடமாகாணசபையின் முதலமைச்சராகவும் அனுபவமுடைய சட்ட அறிஞரான விக்கினேஸ்வரன் அவர்கள் அனைத்துலகத் தூதரகங்களுக்கும் ஊடகங்களுக்கும் அனுப்பிய ஊடக அறிக்கையில் சிறீலங்கா ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாக இருக்கும் தகுதியைக் கொண்டுள்ளதா என ஐக்கிய நாடுகள் சபை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் போர்க் குற்றவாளிகள், மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்தவர்கள், தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்தவர்கள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன்போ அல்லது ஐக்கிய நாடுகள் சபையினால் அமைக்கப்படக் கூடிய இதையொத்த நீதிவிசாரணை ஒன்றிலோ நிறுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அர்த்தமுள்ள இந்தச் சட்ட வழிகாட்டலை அனைத்துலகத் தமிழர்களும் இணைந்து முன்னெடுத்து சிறிலங்காவை நீதியின் முன் நிறுத்த வேண்டிய பெரும் பொறுப்பைக் கொண்டவர்களாக உள்ளனர் என்பதை 'இலக்கு' நினைவுறுத்த விரும்புகிறது.

***- ஆசிரியர்***



# வர்த்தக சந்தைகளை பரவலாக்கி நிலைமையை எதிர் கொள்கிறோம்

வவுனியா நகரசபைத் தலைவர் **இ. கௌதமன்**

**ஊரடங்கு சட்ட தளர்வின் போது நகரப் பகுதிக்கு வரும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வவுனியா நகரசபை பல முனைப்பான செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளது என வவுனியா நகரசபைத் தலைவர் இ. கௌதமன் இலக்கு ஊடகத்தின் கேள்விக்கு பதில் அளிக்கும் போது தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முழு உலகத்திலும் தற்போது பேசுபொருளாகவும் அச்சுறுத்தல் விடுக்கும் விடயமாகவும் இந்த கொரோனாத் தொற்று அமைந்துள்ளது. இலங்கையிலும் 113 பேர் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்த சம்பவமும் இலங்கையில் பதிவாகியுள்ளது.

இந்த அவசரகால நிலையில் வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசினால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் அத்தியாவசிய தேவைகளைக் கருத்திற்கொண்டு இடையிடையே ஊடரங்கு சற்று தளர்த்தப்படுகின்றது. ஊடரங்குச் சட்டம் தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் நகரப் பகுதிக்கு அத்தியாவசிய தேவை நிமிர்த்தம் வரும் மக்களை வைரஸ் தாக்கத்தில் இருந்து கட்டுப்படுத்த வவுனியா நகரசபை பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக நகரப் பகுதிகளில் தேங்கியிருக்கும் கழிவுப் பொருட்களை அகற்றுதல் மற்றும் தொற்று நீக்குவதற்காக மக்கள் அதிகம் நடமாடும் இடங்களில் தொற்று நீக்கி மருந்து விசிறப்பட்டு வருகின்ற அதே வேளை மக்களுக்கான அறிவித்தல்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த வாரம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்ட தளர்வின் போது அதிகளவான மக்கள் நகரப் பகுதிக்கு வருகை தந்து நெரிசலாக நின்று பொருட்களைக் கொள்வனவு செய்த செயலை அவதானித்தவுடன் இம்முறை ஊரடங்குச் சட்ட தளர்வின் போது மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்கும் முகமாக நகரசபை திட்டமிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் வவுனியாவிலும் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில் விவசாயிகள் தங்களது உற்பத்தி பொருட்களை தாங்களே எடுத்து வந்து விற்பனை செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அதற்காக சில பகுதிகளும் ஒதுக்கப்பட்டது.

வவுனியா மன்னார் வீதியில் காமினி மகவித்தியாலத்திற்கு முன்பாகவும், ஹொறவ பொத்தான வீதியில் ரோயல் உணவகத்திற்கு முன்பாகவும், தமிழ் மத்திய மகாவித்தியாலத்திற்கு முன்பான பகுதி மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பான பகுதிகளில் அவற்றை முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருந்தோம்.

அத்துடன் நகரில் சில்லறை மரக்கறி விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகளையும் அந்த பகுதிகளில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு உத்தரவிட்டிருந்ததுடன், மொத்த மரக்கறி விற்பனை சந்தையில் சில்லறை வியாபாரம் மேற்கொள்ளவும் தடைவிதிக்க ஏற்பாடு செய்தோம்.

அத்துடன் அதிகமான சனநெரிசலை கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா சந்தை சுற்று வட்ட வீதிக்குள் நுழையும் அனைத்து குறுக்கு வீதிகளும் நகரசபையால் மூடப்பட்டிருந்ததுடன், வாகனங்கள் தரித்து நிற்பதற்கும் இடவசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் அதிகளவான மக்கள் நகர் பகுதி நோக்கி வருகை தந்த நிலையிலும் சனநெரிசல் இல்லாமல் பொருட் கொள்வனவு செய்ய இலகுவாக இருக்கும்.

இதேவேளை வவுனியா நகரசபை ஊழியர்களால் நெரிசலை கட்டுப்படுத்தும் விதமாக பொது மக்களிற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

ஊடங்குச் சட்ட தளர்வின் போது அமைக்கப்பட்ட தற்காலிக மரக்கறி சந்தையில் குறித்த கால அவகாசத்துக்கும் விற்பனையாகாத காய்கறிகளை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது ஊரூராக சென்று விற்பனை செய்வதற்கும் நகர சபையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நோய்த் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கிலும் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டமிட்டு நகரின் சனநெரிசலைக் கட்டுப்படுத்த வர்த்தக சந்தைகளை பரவலாக்கிய காரணத்தினால் இம்முறை ஊரடங்குச் சட்ட தளர்வின் போது சனநெரிசல் கணிசமாக அளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஏதிர்வரும் ஊரடங்குத் தளர்வின் போது இம்முறை நாம் விட்ட தவறுகளை சரிசெய்து மேலும் சிறப்பானதாகவும் பாதுகாப்பான முறையிலும் நகரை பாதுகாக்க நகரசபை எப்போதும் துணைநிற்கும்.

நகரசபையின் அறிவுறுத்தல்களுக்கு செவிசாய்த்து கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாருக்கும், திணைக்கள அதிகாரிகளுக்கும், பொது சுகாதார பரிசோதகர் பிரிவினருக்கும், வர்த்தகர்களுக்கும், வவுனியா மக்களுக்கும் செய்திகளை மக்களுக்கு திரிபுபடுத்தாமல் உள்ளதை உள்ளபடி வெளியிடும் ஊடக நண்பர்களுக்கும் நகரசபை தலைவர் என்ற ரீதியில் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று எமது அவசரகால அறிவுறுத்தல்களை செவிசாய்த்து ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டு எனது கருத்துக்களைப் பதிவு செய்யும் இலக்கு இணையத்திற்கும் இலக்கு மின்னிதழுக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார்.

• • •

## கொரோனா நோயினால் ஈழத்தமிழர்கள் இருவர் உட்பட மூவர் மரணம்



கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த மூன்று பேர் இதுவரையில் வெளிநாடுகளில் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவிற்சர்லாந்தில் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 61 வயதான லோகநாதன் என்பவர் சிகிச்சை பலனளிக்காது மரணமடைந்துள்ளார். உணவகம் ஒன்றில் பணியாற்றிவரும் இவர் நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இவரின் குடும்பத்தினர் புங்குடுதீவில் வசித்து வருகின்றனர்.

அதேசமயம், பிரித்தானியாவில் வசித்து வந்த சிறீலங்காவைச் சேர்ந்த 61 வயதான நபர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பிரித்தானியா தகவல்கள் தெரிவித்துள்ளன.

லண்டன் பெல்தாம் பகுதியில் வசித்து வந்தவரே அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனளிக்காது மரணமடைந்துள்ளார்.

மேலும் பிரான்சில் வசித்து வரும் யாழ்ப்பாணம் தாவடியைச் சேர்ந்த 32 வயதான குணரத்தினம் கீர்த்திகன் என்பவர் கொரோனா தொற்றிற்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இவர் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்தவர். இவருக்கு திருமணமாகி 2 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளார். இவரின் மனைவி கர்ப்பிணிப் பெண்ணாவார்.

• • •

## தமிழ் மக்கள் ஒரு தேசமாக பிரிந்து போவது தான் ஒரே தீர்வு – வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்



நீதி தூக்கிலிடப்பட்ட நாட்டில் கொலையாளிகள் சிறையில் இருப்பதில்லை. இந் நிலையில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக பிரிந்து போவது தான் ஒரே தீர்வு என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர்கள், இலங்கையிலிருந்து பொறுப்புணர்வையும் நீதியையும் நம்பக் கூடாது.

நாட்டின் உள்நாட்டுப் போரின் போது எட்டு பொது மக்களைக் கொன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு சிப்பாயை இலங்கை ஜனாதிபதி வியாழக்கிழமை (26) விடுவித்துள்ளார்.

இந் நிலையில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக பிரிந்து போவது தான் ஒரே தீர்வு. தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக மாற்றியதன் விளைவு தான் இது.

கொன்றவனையே நீதிபதி ஆக்கும் உள்ளக விசாரணை வேண்டாம். கோழிகளுக்கு ஓநாய் பாதுகாவலன் என்று நம்பத் தமிழ் மக்கள் இனியும் தயாரில்லை. தமிழ் இனப்படுகொலையாளிகளிடம் இருந்து தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு கேட்க ஐ.நாவிடம் சர்வசன வாக்கெடுப்பை கோர வேண்டும்

சிறீலங்காவின் நீதித்துறை சுயாதீனமாக இயங்கவில்லை. அதற்குள் ஆட்சியாளர்களினதும், இராணுவத்தினரதும் தலையீடுகள் உண்டு. நாடு இராணுவத் தனத்தை நோக்கிப் போகிறது. தமிழ் மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஒற்றை யாட்சிக்குள் சேர்ந்து வாழ முடியாது என அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்

• • •



# கொரோனா வைரசும் உள்ளூர் அறிவு முறைமைகள் குறித்த அக்கறைகளும்

து.கௌரீஸ்வரன்

இலங்கைத் தீவில் வாழும் மனிதர்களுக்கு அனர்த்தங்கள் புதியவையல்ல. வரலாற்றில் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து வாழ்ந்த அனுபவங்கள் பெற்றவர்கள். இயற்கையான அனர்த்தங்கள் ஏற்பட்ட போதும், செயற்கையான அனர்த்தங்கள் உருவான போதும் பாரதூரமான பட்டினியை எதிர் கொள்ளாததுடன் அதனால் வரும் போசாக்கின்மையால் பாதிக்கப்படாதவர்களாகவும் இலங்கைத் தீவின் மக்கள் கடந்த கால வரலாற்றில் இனங்காணப்பட்டுள்ளனர்.

தசாப்த கால உள்நாட்டுப் போர் நடைபெற்ற உலகின் பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் போசாக்கின்மையால் பாதிக்கப்படாத மக்களைக் கொண்ட நாடாக இலங்கைத் தீவு தன்னை அடையாளப்படுத்தியது. இவ்வாறு கடந்த காலத்தில் அனர்த்தங்களின் போது பட்டினியையும் அதனால் வரும் போசாக்கின்மையையும் எதிர்கொள்ளாது இருந்தமைக்கு இலங்கைத்தீவில் வலுவாக இருந்த உள்ளூர்ப் பொருளாதார மூலங்களே அடிப்படை யாக இருந்தது என்பது சமூக ஆய்வாளர்களின் கருத்தாகும்.

மதில் கட்டப்படாமல் மரங்கள், செடிகள், கொடிகளுடன் காணப்பட்ட வேலிகளும், மண்மூடி நிரப்பப்படாதிருந்த உள்ளூர்த் தோணாக்களும் அவற்றினை அண்டி வளர்ந்த தென்னை, பனை மரங்களும், சிறு சிறு தாழ்வான நிலப்பகுதிகளும், சதுர்ப்பு நிலங்களும் கண்டல் காடுகளும், சிறு சிறு பற்றைக் காடுகளும் பல்வேறு இலை குழைகளையும், நீர் வாழ் அங்கிகளையும் பல்கிப் பெருகச் செய்ததுடன், அனர்த்த காலங்களில் போசாக் கான உணவுத் தேவையினை ஈடுசெய்யவும் வாய்ப்பினை வழங்கியிருந்தன. இவை உள்ளூர் மருத்துவத்திற்கான மூல வளங்களையும் வழங்கி வந்தன.

பெரும்பாலும் இயந்திரமயப்படுத்தப் படாது உள்ளூர் மனித வளத்தைப் பிரதானமாகக் கொண்டு இயக்கம் பெற்று வந்த வேளாண்மைச் செய்கையானது, அவ்வுறபத்தியுடன் சம்பந்தப் பட்ட ஒவ்வொரு மனிதரதும் வீடுகளில் நெல்லரிசி யின் சேமிப்பினை உறுதிப்படுத்தியது. இதனால் எப்பேர்ப்பட்ட அனர்த்தங்களின் போதும் பட்டினியை எதிர்கொள்ளாது நமது நாட்டின் மக்கள் வாழ முடிந்தது.

தேங்காய்ச் சம்பலோடோ அல்லது கீரைச் சுண்டலோடோ மூன்று வேளையும் சாப்பிடும் நிலைமையினை இந்த உள்ளூர் வளங்கள் வலுவாக்கியிருந்தன.

இன்று கொரோனா வைரசின் தாக்கம் நம்மை வீடுகளுக்குள் முடக்கியுள்ளது. முடங்கிய சில தினங்களிலேயே உணவு இருப்பு பற்றிய பிரக்ஞை எம்மை பீதி கொள்ளச் செய்யத் தொடங்கியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் நாம் எமது உள்ளூர்ப் பொருளாதார வளங்கள் பற்றியும் அவற்றினை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரியமான கூட்டுறவு வாழ்வியல் முறைமைகள் குறித்தும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது. அதாவது ஊரில் கிடைக்கும் வளங்களைப் பகிர்ந்துண்ட பாதீட்டுப் பண்பாடு பற்றியும் அவற்றின் மீளுருவாக்கம் குறித்தும் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

அதேவேளை நவீன நகரமயமாக்கமும் அதனோடிணைந்த நுகர்வுப் பொருளாதாரமும் அனர்த்த காலங்களில் எந்தளவு சாதகமானது என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டிய தேவைகளை



யும் எழுப்பியுள்ளது. இத்துடன் நகரமயமாக்கலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் செயற்பாடுகள் எந்தளவு நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்லக் கூடியது என்ற கேள்விகளையும் கேட்க வேண்டியுள்ளது.

காலனித்துவ ஆக்கிரமிப்பினைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட நவீனமயமாக்கத்தின் காரணமாக மெல்ல மெல்ல வளங்களைப் பகிர்ந்துண்டு வாழ்ந்து வந்த நமது உள்ளூர்ப் பொருளாதார வாழ்வியல் முறைமைகளும் அவற்றின் பொறி முறைமைகளும் வலுக்குன்றச் செய்யப்பட்டு நிரந்தரச் சந்தையான நகரங்கள் உருவாக்கப்பட்டன. இந்நகரங்களை பிரதானப்படுத்திய நுகர்வுப் பண்பாடு வளர்த்தெடுக்கப்பட்டது.

துரித நகரமயமாக்கல் காரணமாக உள்ளூர்ப் பொருளாதாரத்தின் ஆதாரங்களாக விளங்கிய சிறு காடுகள், சிறிய சதுப்பு நிலங்கள், சிறு சிறு குளங்கள் என்பன கவனத்திற்கொள்ளப்படாமல் இல்லாமலாக்கப்பட்டன. இதனால் உள்ளூர் கிணறுகளில் இயற்கையாக வடிகட்டப்பட்டு வரும் நீர்வளம் குறைவடைந்தது. காலப்போக்கில் குடிநீரை விலை கொடுத்து வாங்கும் நிலைமை உருவாக்கப்பட்டது.

நமக்கான குடிநீரும் எரிவாயுவைப் போல வெளியிலிருந்தே வரும் நிலைமை வளர்ந்துள்ளது. அனர்த்த காலங்களில் போக்குவரத்தும், நகரங்களும் முடக்கப்படும் போது அடிப்படைத் தேவையான குடிநீரும் முடங்கி விடும் நிலைமை வலுவாகியுள்ளது.

இச்சூழலில் நமது வளவுகளில் வற்றாத கிணறுகளை வைத்திருப்பதற்கான நிலவியல் பண்பாட்டை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அதாவது சிறு மடுக்களாகவும், குளங்களாகவும், குட்டைகளாகவும், பள்ளங்களாகவும், சதுப்பு நிலங்களாகவும் ஊர்கள் எங்கும் இயற்கை தந்துள்ள நிலவியலைப் பாதுகாத்து புதிய குடியிருப்புக்களை அமைப்பதில் நாம் கவனஞ் செலுத்த வேண்டும்.

இத்தோடு நமது குடியிருப்புக்களில் முருங்கையும், தூதுவளையும், முடக்கொத்தானும், இலட்சகட்டையும், முல்லையும், முசுட்டையும், மான்பாய்ஞ்சானும், குறிஞ்சாவும், அவரையும், பாகலும், நாடையும், பீர்க்கும், புடோலும் என நமது அன்றாட உணவுத் தேவையில் முக்கிய பங்கு வகித்த செடிகளும் கொடிகளும் செழித்து வளர்ந்த வேலிப்பண்பாடு இல்லாமலாகியது.

இன்று அனர்த்த காலத்தில் ஊரடங்கு வேளையில் வீடுகளுக்குள் முடங்கியிருந்து நோய் எதிர்ப்புச் சக்திகளை வழங்கவல்ல உள்ளூர் உணவு களை உண்ண வேண்டிய தேவை உணரப்படும் காலத்தில் நமது வேலிப்பண்பாட்டினை ஞாபகத் தில் கொண்டு வருகின்றோம்.

கடந்து போன போர்க் காலங்களில் நாம் வீடுகளில் முடங்கி வாழ்ந்த நாட்களில் போசாக்கான உணவுகளைப் பெற அன்றிருந்த வேலிப் பண்பாடு நன்கு உதவியிருந்தது. ஆனால் போருக்குப் பின்னர் துரிதமடைந்த நகரமயமாக்கம் நமது வேலிப்பண்பாட்டையும் அதன் பயன்பாடுகளையும் கவனத்திற் கொள்ளாமல் கட்டிட நிருமாணத்தை வளர்த்தெடுத்தது.

பெருவெள்ளம் வரும் போதும் தொற்று நோய்கள் பரவும் போதும் நாம் நமது வேலிப் பண்பாட்டை மீள ஞாபகப்படுத்துகின்றோம். இது இனிவருங் காலத்தில் கடந்து சென்ற பண்பாடாக வன்றி நகரமயமாக்கத்தில் பசுமை வேலிப் பயன் பாடு எனும் திட்டமிடலுடன் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது.

நமது உள்ளூராட்சி சபைகள் கிராம, நகர திட்டமிடல்களின் போது பசுமை வேலிப் பண்பாட்டையும் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.

கொரோனா அனர்த்தம், உல்லாசப் பயணத்தைப் பிரதானப்படுத்தி உள்ளூர் வளங்களைக் கையாண்ட முறைமையில் மாற்றங்கள் தேவை என்பதை இடித்துரைத்து நிற்கின்றது. நமது உள்ளூர் வாவிகளை உல்லாசப் பயணிகளுக்கான அம்சமாக கருதி நடவடிக்கைகளை மேற்கொண்ட போது உள்ளூர் மீனவர்கள் தெரிவித்த கருத்துக்களைச் செவிமடுக்காமல் இருந்ததன் பிரதிகூலம் தற்போது வெளித் தெரிகின்றது.

அதாவது. "சீ பிளேன் அதிக சத்தத்துடனும் அதிக விசையுடனும் ஆத்துக்குள்ள அதுவும் மீன் பெருகும் கல்லுகள் உள்ள பகுதியில் வருவதால்

தொடர்ச்சி 10ம் பக்கம்



# பழந்தமிழ் இலக்கியமும் சமணமும்

காலம் சென்ற ஈழத்து பேராசிரியர் ஆ வேலுப்பிளைளயிடமிருந்து கற்றவையே இங்கு தொகுத்து தரப்படுகிறது. பேராசிரியர் வேலுப்பிள்ளை இறந்து சில ஆண்டுகள் சென்று விட்டன. இன்று தமிழ் நாட்டில் முனைவர் நெடுஞ்செழியன் என்பவர் சமணம் என்பது வடக்கில் இருந்து வந்த ஜைன மதமல்ல, பழந்தமிழர் மத்தியில் உருவான ஆசீவகம் என்று பேசுபவர்களில் பிரபலமானவர். இதுபற்றி பேராசிரியர் வேலுப்பிள்ளையிடம் நான் கேட்ட போது பொறுத்திருந்து பார்ப்போம் என்று மட்டுமே சொன்னார்.




ஆ வேலுப்பிள்ளை, ஒரு நூலில் பின்வருமாறு கூறுகிறார் (Jainism in Tamil Inscriptions and Literature, in Buddhism among Tamils, Ed: Peter Schalk & A Velupillai, Uppsala University, 2002. ) “தனிப்பட்ட ஒரு சமண பொது மக்கள் சமூகம் அக்காலத்தில் உருவாகாமல் இருந்ததால், சமணக் கருத்துக்கள் காணப்படும் பல தமிழ் நூல்களின் ஆக்குநர் சமணரே என்று அடையாளப்படுத்துவதில் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. மிகச்சிறந்த பழந் தமிழ் நூல்கள் என ஆய்வாளரால் கருதப்படும் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் மூன்றும் சமணம் சார்ந்தவையானாலும், அவற்றின் ஆக்குநர் சமணர் என்று திட்டவட்டமாக கூற முடியாமல் உள்ளது.

இதேவகையில், பௌத்த துறவிகளும் தமிழகத்தில் அக்காலத்தில் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். சிலப்பதிகாரம் ஐந்தாம் நூற்றாண்டில் இருந்த இந்நிலையை, அதாவது ஒரே குடும்பத்துக்குள் பல சமய சார்புத் தன்மை இருந்துள்ளதை பிரதிபலிக்கிறது.

கோவலனின் தந்தையும் பொதுமகனுமான மாசாத்துவான் ஒரு பௌத்த துறவியாகவும், கண்ணகியின் தந்தையும் ஒரு பொது மகனுமான மாநாயகன் ஒரு சமணத் துறவியாகவும் சென்றதை அது கூறுகிறது. திருஞானசம்பந்தரின் காலத்திய வேறொரு சைவசமய நாயனாராகிய அப்பர் சமணத்திற்கு ஈர்க்கப்பட அவர் சகோதரி சைவ தொண்டராக இருந்திருக்கிறார்.

ஒரு சமணர் என்று கருதப்பட்ட ஒருவர், சமணத் துறவியாகவே இருந்துள்ளதாகத் தெரிகிறது. 7ஆம் நூற்றாண்டில் கூட ஒரு தனிப்பட்ட சமணப் பொது மக்கள் சமூகம் இல்லாதிருந்தமையால் போலும் திருஞானசம்பந்தரும் அவருடைய சமணம் மற்றும் பௌத்தத்திற்கு எதிரான வாதங்களில் சமண-பௌத்த துறவிகளின் வெளித்தோற்றத்தைப் பற்றியே சாடியிருக்கிறார். சமய வாதங்கள் செய்வதற்கான பட்டி இயக்கம் பெருமளவில் பாமர மக்களை தன்வசமிழுக்க ஆரம்பித்த பின்னரே, தமிழகத்தில் ஒரு சிறிய தனிப்பட்ட சமண சமூகம் உருவாகத் தொடங்கியிருக்கிறது. இவ்வாறு உருவான சமூகத்திற்கு இறந்த காலத்தின் நீண்ட தொடர்ச்சியான சமணத் துறவிகள் பற்றிய நினைவுகள் இருக்கவில்லை.”

**ந. மாலதி**

7ஆம் நூற்றாண்டுக் காலத்தில் ஆரம்பமான பக்தி அலைகளுக்கு முற்பட்ட காலத்திய தமிழ் இலக்கியங்களில் 400இற்கும் மேற்பட்ட புலவர்களால் பாடப்பெற்ற சங்ககாலக் கவிதைத் தொகுப்புகள் ஒன்று. இவை ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலே இயற்றப்பட்டவை. சிறிது பிற்பட்ட காலத்திலேயே சமணரால் இயற்றப்பட்ட தமிழ் இலக்கியங்கள் தோன்றுகின்றன.


ஆக, சமயம் சாராத மிகப் பழைய சங்கக் கவிதைகளைவிட, ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களில் பெரும்பான்மையானவை சமணராலேயே எழுதப்பட்டவை. ஐம்பெரும் காப்பியங்களுள் அடங்கும் ஏனைய மூன்று



காப்பியங்களும், மேலும் ஐந்து சிறுகாப்பியங்கள் எனப்படுபவையும், 7ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தியவையாகக் கணிக்கப்படுகிறது.

இவற்றில், ஒரு பௌத்தரால் இயற்றப் பெற்ற ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியை தவிர்த்து ஏனையவை அனைத்தும் சமணராலேயே இயற்றபெற்றவை. 7ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்ட காலத்திலும் சமணம் தமிழ் இலக்கியத்துக்கும், இலக்கணத்துக்கும் தொடர்ந்து பல ஆக்கங்களை தந்திருக்கின்றது. முக்கியமாக சோழ இராச்சியம் மேலோங்கி இருந்த 10ஆம் நூற்றாண்டை அண்மிய காலத்தில் சமண இலக்கியங்கள்பல எழுதப்பட்டிருக்கின்றன. 15ஆம் நூற்றாண்டு காலத்திற்குப் பின் சமண இலக்கியப் படைப்புக்கள் இல்லாது போய் விட்டன. சமணம் அளித்த இவ்விலக்கியங்கள், திருக்குறளைப் போலவே பகுத்தறிவுக்குட்பட்டவை.

தமிழ் இலக்கணத்திற்கும் சமணத்தின் பங்களிப்பு மிக பரவலானது. முன்பே குறிப்பட்டது போல் தொல்காப்பியம் ஒரு பெரிய தமிழ் இலக்கண நூல். பிந்தைய நூற்றாண்டுகளில் சமணர் இயற்றிய வேறு இரண்டு இலக்கண நூல்கள் நேமிநாதமும், நன்னூலும் ஆகும். நேமிநாதம் தொல்காப்பியத்தை சுருக்கித்தர முயற்சிக்கிறது. பிந்தைய நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட சிறந்த இலக்கண நூலாக நன்னூல் கருதப்படுகிறது. அவிநயம் எனப்படும் வேறொரு சமண இலக்கண நூல் இன்று சிறு சிறு பகுதிகளாகவே கிடைக்கப் பெறுகின்றன.





ஏறத்தாழ 7ஆம் நூற்றாண்டளவில் இப்பகுத்தறிவு சார்ந்த இலக்கிய பண்பாடு, திருஞானசம்பந்தரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பக்தி கலாசாரத்துடன் மாற்றமடைந்தது. புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவையும் இப்பக்தி கலாசாரத்துக்கு வலுவூட்டின. தமிழிலும் புராணங்களும், கம்பராமாயணம் போன்ற இதிகாசங்களும் இயற்றப்பட்டு இப்பக்தி கலாசாரத்துக்கு மேலும் உரமூட்டின. தமிழ் பக்தியை ஒட்டிய தத்துவமும் எழுதப்பட்டது. பிரமாண்டமான இந்து கற்கோவில்கள் கட்டப்பட்டன.

இன்று, தமிழரின் பக்தி இலக்கியங்களிலும், தமிழரின் பழமையான பகுத்தறிவுக்குட்பட்ட இலக்கியங்களிலும் பெருமை கொள்ளும் தமிழர்கள், இவ்விரண்டிற்கும் இடையேயான முரண்பாடுகளை பற்றிய விழிப்புணர்வற்று இருக்கிறார்கள். இவ்விரண்டு இலக்கியப் பண்பாடுகளும் 7ஆம் நூற்றாண்டளவில் கடுமையாக மோதிக் கொண்ட இரு வேறு சமயங்களிலிருந்து உருப்பெற்றவை என்பதையும் உணராதுள்ளனர். இன்றைய தமிழர்களோ, வெறுக்கத்தக்க சமணத்துக்கு எதிராக திருஞானசம்பந்தர் வாதிட்டு வெற்றி கொண்டார் என்று பெருமை கொள்ளக் கற்பிக்கப்படுகிறார்கள்.


இன்று தமிழ்நாட்டில் பயணிகளுக்கு கவர்ச்சியாக காட்டப்படுவது ஆயிரமாண்டுகளுக்கு பிந்தைய கோவில்களே. இதற்கு முற்பட்ட சமணத் தலங்கள் பயணிகளுக்கு விளம்பரப்படுத்தப்படுவதில்லை. இத்தளத்தில் காணப்படும் தமிழ்நாட்டின் சமண இடங்களின் பட்டியல் பிரமிப்பை தரும். http://www.tamiljains.org/historic-tamil-jain-sites. தமிழர் தம் வரலாற்றறிவை மேம்படுத்துவதானால், பக்தி இயக்கம் எனப்படும் பெரும் அலை உண்டாக்கிய மாற்றங்களை ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

• • •

# 21 நாள் ஊரடங்கால் பாதிக்கப்படும் இந்திய மக்களின் பொருளாதாரம்




கல்யாணி



உலகில் உள்ள அனைவரும் அச்சப்படும் ஓர் விடயமாக கொரோனா வைரஸ் தாக்கம் உள்ளது. இது இன்று உலக நாடுகளின் பொருளாதாரங்களை வீழ்ச்சியுறப்பண்ணியதுடன், பொது மக்களை பெரும் இக்கட்டான நிலைக்கும் தள்ளியுள்ளது. கொரோனா பரவுவதைத் தவிர்ப்பதற்காக மக்களை தனிமைப்படுத்துதல் என்ற நடைமுறைக்கு அமைய பல நாடுகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு மக்களை வீடுகளிற்குள் முடக்கியுள்ளது.

இந்தியாவிலும் இந்த ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 24 மார்ச் மாதம் நள்ளிரவு 12மணிக்கு நடைமுறைக்கு வந்த ஊரடங்குச் சட்டமானது, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி வரை நீடிக்கப்படவுள்ளது. இந்த அறிவிப்பானது மக்களை புரட்டிப் போட்டுள்ளது. அத்துடன் 144 தடை உத்தரவும் விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்திற்கமைய மக்களின் அன்றாட தேவைகளுக்காக வீட்டிற்கு வெளியில் சென்று வரலாம் என்பது நடைமுறை. இதனால் காய்கறி சந்தைகள், பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள் போன்ற இடங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. இதனால் மக்களுக்கு தொற்று பரவும் அபாயம் அதிகமாக இருக்கின்றது.

மேலும் இந்த ஊரடங்கு நடைமுறையில் இருப்பதால், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களுக்கு விடுமுறை அறிவித்துள்ளது. மேலும் தனியார் நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு அரசாங்கம் சம்பளங்களை வழங்குகின்றது. அரச ஊழியர்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டதாக கூறமுடியாது. ஆனால் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்தியாவில் ஐ.ரி.நிறுவனங்கள் அதிகமாக உள்ளன. அதேபோல், வாகன உதிரிப்பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களும் அதிகமாக உள்ளன. ஐ.ரி.நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் வேறு நிறுவனப் பணியாளர்களுக்கு விடுப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அன்றாடம் உழைத்து தங்கள் தேவைகளை நிறைவேற்றும் பொது மக்கள் இந்த ஊரடங்குச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொது நிறுவனங்கள், வணிக வளாகங்கள் உட்பட அனைத்து தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் நாடு முழுவதும் 21 நாட்கள் முடக்கப்படுவதால் வர்த்தகம் முற்றிலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த 21 நாள் முடக்க அறிவிப்பால் இந்தியா முழுவதும் சுமார் 6 லட்சத்து 75 ஆயிரம் கோடி வர்த்தக இழப்பு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதால், நிறுவன உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். திருப்பூர் ஆடை உற்பத்தி நிறுவன உரிமையாளர் ஒருவர் செலவுகளை சமாளிக்க முடியாது கடந்த 25ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டுள்ளார். மேலும் ஆந்திர மாநிலத்தில் நோயுற்று இறந்த தனது 8 வயது மகனை பணம் இல்லாத காரணத்தினால் அவரின் தந்தை தூக்கிச் சென்று மயானத்திற்கு சென்ற பதிவுகளும் இடம் பெற்றுள்ளது.




மேலும் அன்றாடம் வேலை செய்து தங்களின் குடும்பங்களை பராமரித்து வந்த சிறிய வியாபாரிகள், சிறிய கடை வைத்திருப்போர் தங்களின் அன்றாட வருமானத்தை இழந்துள்ளனர்.

அத்துடன் இந்தியாவில் கோவில்களே அதிகம் காணப்படும். தற்போது கோவில்கள், வணக்கஸ்தலங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. அத்துடன் திருமணம் போன்ற நிகழ்வுகளும் நடைபெறுவதில்லை. எனவே பூந்தோட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் அறுவடைகளை தற்போது வெளியில் விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளதால், அவற்றை கால்நடைகளுக்கு உணவாக்குகின்றனர். இது அவர்களை இலட்சக் கணக்கான ரூபாய்களை இழக்கும் நிலைக்கு தள்ளியுள்ளது. கோவில்களில் பூசை செய்யும் அட்சகர்கள் தங்களுக்கான வருமானத்தையும் இழந்துள்ளனர்.

அத்துடன் கோவில்களில் பிச்சை எடுப்பவர்களின் தொகை தமிழ்நாட்டில் அதிகம். தற்போதைய 144 தடை உத்தரவையடுத்து, அவர்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்களுக்கு சேவை அடிப்படையில் உணவு வழங்கி வரும் மனிதாபிமான தொண்டர்களையும் உணவு வழங்க வேண்டாம் என்று அரசு அறிவித்துள்ளது. இதனால் கொரோனா தொற்று அதிகரிக்கும் என்பதால், இவ்வாறான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் உணவகங்கள், உணவு விடுதிகள் போன்றவை மூடப்பட்டுள்ளன. எனவே இவற்றில் வேலை செய்த பணியாளர்கள், உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வேறு மாவட்டங்களில் இருந்து வந்து சென்னையில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கள் ஊர்களுக்கு மீண்டும் செல்ல முடியாத நிலையில் இருப்பதுடன், அவர்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உணவகங்கள் இல்லாமல் தவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, தமிழகத்தில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர், வெளிநாட்டவர்கள் வந்து தங்கி இருக்கும் தங்கும் விடுதிகள் (Guest house) வைத்திருப்பதுடன், அவர்களுக்கான போக்குவரத்து, மற்றும் உணவு வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றனர். இதுவே அவர்களுக்கான வருவாயாக அமைந்துள்ளது. ஆனால் தற்போது வெளிநாட்டிலிருந்து எவரும் வருவதில்லை. இதனால் அவர்கள் தங்களின் வருவாயை முற்றிலுமாக இழந்துள்ளனர். இருந்தும் அவர்கள் நடத்தி வரும் விடுதிகளுக்கான மாதாந்த வாடகையை வீட்டின் சொந்தக்காரர்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் உள்ளனர். இது அவர்களை பெரிதும் பாதித்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

மேலும் தமிழகத்தில் வசிக்கும் ஈழத் தமிழர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளிலுள்ள உறவினர்களின் வருவாயை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். தற்போது வெளிநாட்டவரே தங்களின் பொருளாதாரங்களை இழந்து அல்லாடும் அதேவேளை, அவர்கள் தங்கள் உறவினர்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர். எனவே இந்தியாவில் வசிக்கும் ஈழத் தமிழர்களின் நிலை பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் இந்த நிலை ஒரே மாதிரியானதாக இருந்த போதும், இந்தியாவில் வாழும் மக்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் தொகை அதிகம். உலகில் உயர்ந்த பணக்காரர்களும் இந்தியாவிலேயே வசிக்கின்றனர். அதேபோல் மிக வறுமையான ஏழைகளும் இந்தியாவிலேயே வசிக்கின்றனர்.

இதற்கிடையில் இந்தியாவின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிப்பு அடைந்தாலும் பரவாயில்லை, தனக்கு மக்களின் உயிர்தான் முக்கியம் என்று பிரதமர் மோடி உரையாற்றியிருக்கிறார்.

• • •



# நாங்கள் சூப்பர் ஹீரோக்கள் அல்ல, நாங்கள் புரட்சிகர மருத்துவர்கள்!

சு.சுரபி

மேற்குலகின் பொருளாதார தடைகளால் சுமார் 60 ஆண்டுகளாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் கியூபா வளர்ச்சியடைந்த நாடான இத்தாலிக்கு தனது மருத்துவக் குழுவினரை அனுப்பி வைத்துள்ளது.

1959இல் அமெரிக்க கைப்பொம்மை கொடுங்கோல் ஆட்சியை பிடல் கஸ்ரோ தலைமையிலான புரட்சி வீழ்த்தியது. அங்கு சோஷலிச அரசு நிறுவப்பட்டது. அன்றிலிருந்து அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் அத்தேசத்தின் மீது பொருண்மிய தடைகளைக் கொண்டு வந்தன.

அமெரிக்கா ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்ள வழிகளில் முயற்சித்த போதும் கஸ்ரோவை படுகொலை செய்ய நூற்றுக்கணக்கான முறை முயன்றபோதும், அவையனைத்தும் கியூபாவால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

உணவு, மருந்து உள்ளிட்ட கடுமையான பொருளாதாரதடைகளைஅந்த நாடு எதிர்நோக்கிய போதும், கல்வியறிவில் நூறு சதவீதத்தை எட்டியது. விவசாயத்தை பெருக்கியது. பற்றாக்குறைகள் நிலவிய போதும் பட்டினியற்ற ஒரு நிலையை அது பேணியது.

நவீனதொழில்நுட்பசாதனங்களோஏனைய துறைசார் வளங்களோ இல்லாத நிலையிலும் தொழிற்றிறன் வாய்ந்த மருத்துவர்களையும் செவிலியர்களை கியூபா உருவாக்கியது. அவர்களின் திறமையையும் அர்பணிப்புகளையும் உலகம் இன்று வியந்து நோக்குகிறது.

கஸ்ரோவோடு புரட்சிக்கு தோளோடு தோள் நின்ற சேகுவேரா ஒரு மருத்துவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரின் ஆலோசனை அல்லது முன்னுதாரணம் கூட கியூப மருத்துவத் துறை வளர்ச்சியில் தாக்கத்தைச் செலுத்தும் ஒரு காரணியாக அமைந்திருக்கலாம்.

இத்தாலியில் தற்போது 86,000 இற்கு அதிகமானோர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். 9,000 மேற்பட்டோர் சாவடைந்துள்ளனர். இத்தாலியின் கட்டுப்பாட்டை மீறியதாக இந்த பயங்கர நிலைமை தொடர்கிறது.



ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது அமெரிக்காவோ கூட உதவிக்கு வராத நிலையில், சின்னஞ்சிறிய கரிபியன் நாடான கியூபா தனது தனித்திறமை வாய்ந்த வைத்திய குழுவினரை அங்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த குழுவினருக்கு இத்தாலியை சென்றடைந்ததும் பெரும் நம்பிக்கையுடன் கூடிய வரவேற்பு வழங்க ப்பட்டது.

52 மருத்துவர்கள் மற்றும் செவிலியரை உள்ளடக்கிய இந்த குழு, தமது பணிகளை உடனடியாக ஆரம்பிக்கும் என அறிய முடிகிறது. கியூபா இவ்வாறான மனிதாபிமானப் பணியை மேற்கொள்வதொன்றும் புதிய விடயமல்ல. ஆனால் தொழில் நுட்பத்திலும், பொருளா தாரத்திலும் மேம்பட்டு நிற்கும் ஒரு மேற்கு நாட்டுக்கு தனது வைத்திய உதவியை வழங்குவது இதுவே முதல் தடவையாகும்.




உலகில் ஏற்பட்ட பல்வேறு இயற்கை பேரிடர்கள், தொற்று நோய்களின் போது கியூபா மேற்கொண்ட மனிதாபிமான மருத்துவப் பணிகள் போற்றத்தக்கவை. சிலி, நிகரகுவா, ஈரான், ஹெய்டி போன்ற நாடுகளில் நிலநடுக்கங்கள் மற்றும் பெரும் புயல்கள் ஏற்பட்ட போதும் வெனிசூலாவில் பாரிய மண்சரிவு இடம் பெற்ற போதும் கியூபா விரைந்து உதவிக்கரம் நீட்டியது.

2004இல் ஆசியாவில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் போது இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே, இலங்கை போன்ற நாடுகளில் கியூபா தனது மனிதநேய மருத்துவ பணிகளை மேற்கொண்டது. கியூபாவை தனிமைப்படுத்தி, கொடுமையான பொருளாதார தடைகளை விதித்து அமெரிக்கா அடாவடித்தனம் செய்து கொண்டிருந்த நிலையிலும் ‘பகைவனுக்கும் அருள்வாய்” என்ற வகையில் தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டியது கஸ்ரோவின் கியூபா.

அமெரிக்காவில் வீசிய கத்ரீனா புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைமைகளில் உதவி வழங்கவென 1500 பேர் கொண்ட மருத்துவ உதவிக் குழுவை தயார் நிலையில் கியூபா வைத்திருந்தது. ஆனால் தனது வறட்டு கௌரவத்தால் அதனை மறுத்தது அமெரிக்கா.

எல்லாவற்றிற்கும் மேலாக 2013இல் மேற்கு ஆபிரிக்காவில் எபோலா வைரஸ் தொற்று ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாகிய வேளை தனது 460 பேர் கொண்ட மருத்துவக் குழுவை எந்த தயக்கமும் இன்றி அனுப்பி வைத்தது கியூபா தேசம்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த உலகளாவிய கொரோனா தொற்று பேரபாயத்தில் கியூபா வெளி நாடுகளுக்கு அனுப்பும் ஆறாவது மருத்துவஉதவி நடவடிக்கையே இந்த இத்தாலி நடவடிக்கையாகும்.

இதற்கு முன்னராக வெனிசுலா மற்றும் நிக்கரகுவா, ஜமைக்கா, சுரினாம் மற்றும் கிரெனடா ஆகிய நாடுகளுக்கு கொரோனாவுக்கு எதிரான தனது மருத்துவ குழுக்களை கியூபா அனுப்பியுள்ளது.

“நாங்கள் அனைவரும் பயப்படவே செய்கி றோம். ஆனால் இந்த நேரத்தில் இது நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு புரட்சிகர கடமையாக உள்ளது. எனவே நாங்கள் பயத்தை நீக்கி ஒரு பக்கமாக வைக்கிறோம்” என குழுவின் தலைவரும் தீவிர சிகிச்சை நிபுணருமான லியோனார்டோ பெர்னாண்டஸ் இத்தாலிக்கு புறப்படுவதற்கு முன்னர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தான் பயப்படவில்லை என்று கூறுபவர் ஒரு சூப்பர் ஹீரோவாக இருக்கலாம். ஆனால் நாங்கள் சூப்பர் ஹீரோக்கள் அல்ல. நாங்கள் புரட்சிகர மருத்துவர்கள்.”

லைபீரியாவில் எபோலாவுக்கு எதிரான நடவடிக்கையிலும் பங்கு கொண்ட இவரின் எட்டாவது அனைத்துலக பணி இதுவாகும்.

பல நாடுகளாலும் கரைதட்ட அனுமதி மறுக்கப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளான பிரித்தானிய பயணிகள் கப்பலை எந்த தயக்கமும் இன்றி தனது துறைமுகத்தில் கரைதட்ட அனுமதியளித்ததன் மூலம் தனது போற்றத்தக்க மனிதத்துவத்தை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியது அந்த சின்னஞ்சிறிய தேசம். தமது பயணிகள் 600 பேரினது நலனில் கியூபா காட்டிய அக்கறைக்காகவும், வழங்கிய உதவிகளுக்காகவும் பிரித்தானியா கியூபாவுக்கு நன்றி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் சேர்ந்து நின்று ஆறு தசாப்தங்களாக கியூபாவை ஒதுக்கி, அதற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு துணை போகும் மேற்குலகம் இனியாகிலும் உண்மைகளை உணர்ந்து ஆபத்தில் கைகொடுப்பவனே உண்மையான நண்பன் என்பதற்கமைய கியூபாவுடன் நல்லுறவை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

இன்று கியூபா மட்டுமன்றி சீனா, மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளே இந்த பேரிடரில் மேற்குலக நாடான இத்தாலிக்கு விரைந்து உதவிகளை வழங்குகின்றன. சீனா மருத்துவ உதவிக் குழுக்களையும் மருத்துவ உபகரணங்களையும் ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது.



ரஷ்யா தனது எட்டு படைத்துறை நடமாடும் மருத்துவக் குழுக்களை இத்தாலிக்கு அனுப்புகிறது. அத்துடன் கிருமி நீக்கம் செய்யும் வாகனங்கள் மற்றும் மருத்துவ பொருட்களையும் அது அனுப்புகிறது. குறிப்பாக தொற்று நோயியல் வைத்திய நிபுணர்ககள் 100 பேர் அனுப்பி வைக்கப்படுவதாக அந்த நாடு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவோ அல்லது இத்தாலியின் மற்றைய நட்பு நாடுகளோ உடனடியாக ஓடிவரவில்லை. அமெரிக்காவிலும் சில மேற்கு நாடுகளாலும் எதிரியாக காட்டப்பட்ட நாடுகளே இன்று களத்தில் நிற்கின்றன.

இந்த யதார்த்தத்தை மேற்குலகம் இந்த சந்தர்ப்பத்திலாவது உணர்ந்து கொள்ள வேண்டும். தனக்கு வேண்டாதவர்களை எல்லோருக்கும் எதிரியாக காட்டும் தன்நலன் மட்டுமே சார்ந்து செயற்படும் சக்திகளை புரிந்து கொண்டு இந்த நாடுகள் பயணிப்பது உலகுக்கு உகந்ததாகும்.

• • •

## கோவிட்-19 – ஈராக்கில் இருந்து வெளியேறுகின்றது பிரான்ஸ் இராணுவம்



கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக ஈராக்கில் உள்ள தனது படையினரை திரும்ப பெறுவதற்கு பிரான்ஸ் தீர்மானித்துள்ளது.

அமெரிக்க படையினர் தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரான்ஸ் நாட்டுப் படையினர் ஈராக்கில் இருந்து வெளியேறவுள்ளனர். ஈராக் படையினருக்கான பயிற்சி நடவடிக்கை என்ற போர்வையில் தங்கியுள்ள 200 படையினரையும் வெறியேற்ற பிரான்ஸ் திட்டமிட்டுள்ளது.

போர் மற்றும் இராஜதந்திரப் பேச்சுக்கள் மூலம் வெளியேற்ற முடியாத மேற்குலக படையினரை வைரஸ் வெளியேற்றியுள்ளதாக ஈராக் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கோவிட்–19 – பிரித்தானியா அரச குடும்பம் மற்றும் பிரதமர் பாதிப்பு



உலகின் இயக்கத்தை படிப்படியாக முடக்கி வரும் கொரோனா வைரஸ் பிரித்தானியாவின் உயர் மட்ட தலைவர்களை தாக்கியுள்ளது உலகில் மேலும் அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளது.

பிரித்தானிய அரச குடும்பத்தின் இளவரசர் சார்ள்ஸ் கொரோனா வைரசின் தாக்கத்திற்கு உட்பட்டு ஸ்கொட்லாந்தில் உள்ள அரச மாளிகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் பிரித்தானியா பிரதமர் பொறிஸ் ஜோன்சனும், சுகாதாரத்துறை செயலாளர் மற்கான்கொக் மற்றும் பிரதம மருத்துவ அதிகாரி பேராசிரியர் கிறிஸ் விற்றிக் ஆகியோர் கோவிட்-19 வைரசின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை (27) பிரித்தானிய அரசு தெரிவித்துள்ளது.

இந்த வைரசின் தாக்கத்திற்கு உட்பட்ட முதலாவது அரச தலைவர் ஜோன்சன் ஆவார். அவரின் மனைவி கர்ப்பமாக இருப்பதால் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

உலகப் பொருளாதாரம் தேக்கமடைந்துள்ளது –

## உலக நாணய நிதியம் அறிவிப்பு

உலகின் பொருளாதரத்தை கொரோனா வைரஸ் சீரளித்துள்ளதாகவும், அதனால் பொருளாதாரம் மந்தநிலையை அடைந்துள்ளதாகவும் கடந்த வெள்ளிக்கிழமை (27) உலக நாணய நிதியம் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு உலகின் பொருளாதாரம் சுருங்கியுள்ளது. மிகப்பெருமளவான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த தொற்றுநோயே உலகத்தில் பொருளாதார சீரழிவை கொண்டு வந்துள்ளது என அதன் தலைவர் கிறிஸ்ரலீனா ஜியோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

# உலக நாடுகள் இறப்பு எண்ணிக்கையை குறைத்துக் கூறுகின்றன



கோவிட்-19 வைரசின் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் எணிண்ணிக்கையை உலக நாடுகள் குறைத்துக் கூறுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

சீனாவில் 3,212 பேர் இறந்ததாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்ற போதும் அங்கு இறப்பு எண்ணிக்கை பல மடங்கு அதிகம் என மேற்குலக நாடுகளின் ஊடகங்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

அதேசமயம், தற்போது பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இறப்பு எண்ணிக்கையை குறைத்து வெளியிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ் வெளியிடும் தகவல்கள் வைத்தியசாலைகளில் இறப்பவர்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. வீடுகளில் மற்றும் வயோதிப இல்லங்களில் இடம்பெறும் மரணங்கள் அதில் உள்ளடக்கப்படுவதில்லை என பிரான்ஸின் வைத்தியசாலைகள் கூட்டமைப்பின் தலைவர் பிரெடெறிக் வலாக்ஸ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இத்தாலியில் இறந்தவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே வெளியிடப்பட்டுள்ளது.

பிராந்திய ரீதியான தகவல்களே வெளியிடப்படுகின்றன. எனவே மாகாண ரீதியில் இதன் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். பெருமளவான மக்கள் அங்கு இறக்கின்றனர், ஆனால் அவர்களின் மரணம் கொரோனா வைரசின் மரணமாக கணிக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் வீடுகளில் அல்லது வயாதனவர்கள் பராமரிக்கப்படும் இல்லங்களில் இறக்கின்றனர் என பெர்கோமா நகரத்தின் தலைவர் கோர்ஜியோ கொரி றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதத்தில் முதல் 15 நாட்களில் தனது நகரத்தில் மட்டும் 164 பேர் இறந்துள்ளதாகவும் ஆனால் 31 பேர் மட்டும் தான் கொரோனா வைரசினால் இறந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 56 பேர் இறந்துள்ளனர்.

## ஒருவரின் கவனக்குறைவால் தனிமைப்படுத்தப்பட்ட 40,000 பேர்

இந்தியாவில் ஒரு நபர் மேற்கொண்ட கவனக்குறைவான நடவடிக்கையினால் சில கிராமங்களைச் சேர்ந்த 40,000 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஞ்சாப் மாநிலத்தில் 70 வயதான நபர் ஒருவர் கோவிட்-19 வைரசின் தாக்கத்தால் மரணமடைந்துள்ளார். அண்மையில் இத்தாலி மற்றும் ஜேர்மனிக்கு சென்றுவந்த அவர் சுய தனிமைப்படுத்தலை புறக்கணித்துள்ளார்.

இந்தியாவுக்கு திரும்பிய அவர் ஒவ்வொருநாளும் ஏறத்தாள 10,000 மக்கள் கூடும் கொல மோகலா என்ற திருவிழாவில் கலந்து கொண்டுள்ளார். அதன் பின்னர் அவர் இறந்துவிட்டார், தற்போது அவரின் 19 உறவினர்களுக்கு வைரசின் பாதிப்பு உள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 20 கிராமங்களை மூடிய காவல்துறையினர் மக்கள் வெளியேறாதவாறு தடுத்துள்ளனர்.

## பிரேத அறையாக மாறும் பிரித்தானியாவின் மிகப்பெரும் விமான நிலையம்



பிரித்தானியாவின் மிகப்பெரும் விமான நிலையங்களில் ஒன்றான பெர்மிங்கம் விமான நிலையம் தற்போது பிரேதங்களை பராமரிக்கும் நிலையமாக மாற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளுக்கு நாள் கொரோனா வைரசின் தாக்கத்தால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தொடர்ந்து பிரித்தானிய அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக மேற்குப் பிராந்திய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். ஆரம்பகட்டமாக இந்த நிலையம் 1500 பிரே தங்களை பராமரிக்கும் தகமை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

அதேசயம், கிழக்கு லண்டன் எக்செல் மாநாட்டு மண்டபம், மற்றும் மன்செஸ்ரர் மாநாட்டு மண்டபம் ஆகியன தற்காலிக மருத்துவமனைகளாக மாற்றப்பட்டுள்ளன.

# இந்தியாவின் நடவடிக்கையை கண்டிக்கிறது எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு



கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்து வருவதால் பெருமளவான மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்தியா காஸ்மீர் மக்களுக்கான இணையத்தள இணைப்பை மட்டுப்படுத்தியுள்ளது. அதனை கண்டிப்பதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்திய அரசின் நடவடிக்கை ஒரு குற்றமான, பொறுப்பற்ற நடவடிக்கையாகும். காஸ்மீரின் சுய அதிகாரம் பறிக்கப்பட்ட நாள் முதல் அங்கு இணையத்தள வசதிகளை தடை செய்து உலகின் தொடர்பில் இருந்து அதனை துண்டித்துள்ளது இந்தியா.

ஆனால்தற்போது வைரசின்தாக்கத்தினால் வீடுகளினுள் முடங்கியுள்ள மக்கள் தமக்கு இடையில் தொடர்பு கொள்ள முடியாதவாறு இந்திய அரசு தொடர்ந்து தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை அறிந்து தம்மை பாதுகாப்பது எப்படி என்ற தயார்படுத்தல்கள் கூட இல்லாது 8 மில்லியன் மக்கள் அங்கு தவிக்கின்றனர். இது ஒரு கொடூரமான, ஜனநாயக விரோத செயலாகும்.

## கொரோனா.... தொடர்ச்சி..

மீன் பெருகுவது குறைகிறது என்று உள்ளூர் மீனவர்கள் ஆதங்கப்பட்ட போது டொலரும் யூரோவும் வருகிறது இதுதான் பொருளியல் மாற்றம் பொருளாதார வளர்ச்சி என்று நியாயம் கூறினோம். ஆனால் இன்று சீ பிளேனும் வரவில்லை டொலருமில்லை, யூரோவுமில்லை ஆத்துல மீனும் குறைஞ்சித்து. ஊராக்களுக்குச் சாப்பாடுமில்லாத நிலைமை வந்துள்ளது" இந்த அனுபவங்களை கருத்திற் கொண்டு நமது கடந்தகால உல்லாசப் பயணத் தொழிற்துறையினை மையப்படுத்திய அபிவிருத்திச்செயற்பாடுகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய தேவையினை கொரோனா வைரஸ் நமக்கு ஏற்படுத்தியுள்ளது.

பணத்தை அல்லது மூலதனத்தை அதிகமாக்கிக் கொள்ளுதல் எனும் பொருளாதார கருத்தியல் ஆதிக்கம் பெற்று கிருமிநாசினிப் பாவனைகளையும், இயந்திரமயமாக்கலையும், பயன்பாட்டிற்குக் கொண்டு வந்த விவசாய உற்பத்தி முறைமைகள் குறித்தும் பொருத்தமற்ற மீன்பிடி முறைமைகளைப் பயன்படுத்தி நீர்வாழ் அங்கிகளின் இருப்பினை அச்சுறுத்தி வரும் நவீன தொழில் நுட்பப் பிரயோகங்கள் குறித்தும் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தேவையை கொரோனா அனர்த்தம் உருவாக்கியுள்ளது.

அதாவது நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல நமது வேளாண்மை உற்பத்திச் செயற்பாட்டில் மனித வளத்தை பிரதானமாகக் கொண்டமைந்த உற்பத்தி முறைமை இருந்த போது விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட மனிதர்களின் வீடுகளில் உணவுக்குத் தேவையான நெல்லரிசியினைச் சேமிக்கும் பண்பாடு வலுவாக இருந்தது.

புல்லுப் பிடுங்குதல், வேளாமை வெட்டுதல், சூடுமிதித்தல், கதிர் பொறுக்குதல் என நமது சமூகத்தின் மனிதர்களின் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கான உணவுச் சேமிப்பு பொறி முறைமை பேணப்பட்டு வந்தது. பொருளாதாரத் தடையுடன் போர் நடந்த போதும் நமது சமூகத் தினர் பட்டினி என மடிந்து போகாமலும் யாரிடமும் அன்றாட உணவுக்காகக் கையேந்தா மலும் வாழ்வதற்கான உணவு இருப்பினை நமது வேளாண்மை உற்பத்தி முறைமை வலுப்படுத்தி வந்தது.

ஆனால் பின்னர் வந்த இயந்திரமயமாக்கல் நமது வேளாண்மை உற்பத்திப் பொருளாதாரத்தின் சமூக பண்பாட்டு அம்சங்களைக் கவனத்திற் கொள்ளாமல் பணமீட்டல், இலாபப் பெருக்கம் எனும் நவீன பொருளியல் சமன்பாட்டை மாத்திரம் கவனத்திற் கொண்டு அதற்குச் சாதகமான கதைகளுடன் வளர்த்தெடுக்கப்பட்டதால், இன்று ஓர் அனர்த்த காலத்தில் விவசாய சமூகங்களே ஒருநாள் உணவுக்காக அவஸ்தைப்படும் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளது.

கொரோனாவால் உலகமே முடங்கியுள்ள காலத்தில் நமது வேளாண்மை உற்பத்தி முறைமையில் மனிதப் பங்குபற்றுதலால் ஏற்பட்டு வந்த சாதகங்கள் பற்றிய கவனிப்புத் தெரிய வருகின்றது. எனவே நவீன தொழில் நுட்பங்களை பிரயோகத்திற்குக் கொண்டு வரும் போது நமது பண்பாட்டின் நிலைமைகளுக்கேற்ப ஆராய்ந்து திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை கொரோனா நமக்குக் கற்றுத் தந்துள்ளது.

கொரோனா நமது வைத்தியத் துறையில் நாம் உள்ளூர் வைத்திய முறைமைகளை வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலுவாக உணர்த்தி நிற்கின்றது. இன்று கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்களை மட்டுமே கவனிக்க முடியாதளவிற்கு சில மேற்குலக நாடுகள் தமது மருத்துவத் துறையின் சகல சக்தியையும் ஒன்று திரட்டியும் முடியாதவாறு திண்டாடும் அனுபவங்களின் பின்புலத்தில் நம்மிடையே பெரும்பாலும் துறைசார் நபர்களின் தன்னார்வம் ஒன்றையே மையமாகக் கொண்டு உயிர்ப்புடன் இருந் துவரும் விசக்கடி வைத்தியம், முறிவு வைத்தியம், மருத்துவிச்சிப் பாரம்பரியம், கட்டு வைத்தியம் முதலிய வைத்திய முறைகளை நாம் மதித்து அவற்றின் பெறுமதிகளை உணர்ந்து அவற்றை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

தொற்று நோய் அனர்த்தம் ஒன்று வரும் போது அந்நோயை பிரதானப்படுத்தி மருத்துவத் துறை இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும் போது ஏனைய நோயாளர்களைக் கவனிக்கவே முடியாத பரிதாபம் உருவாகும் போது நமது பாரம்பரியமான உள்ளூர் மருத்துவர்களும் அந்த மருத்துவ முறைகளும் அந்த ஆபத்தான இடைவெளியை ஈடு செய்யும் வல்லமை உள்ளவர்களாக இயல்பாகவே இயங்குவார்கள் என்பதை நாம் தற்போது உணர முடிகின்றது.

எனவே முடிவாக இன்று உலகளாவிய அச்சுறு த்தலாக இருக்கும் கொரோனா வைரசின் தாக்கங்களும் அது தரும் படிப்பினைகளும் நீண்ட பாரம்பரியங்களைக் கொண்ட மனித சமூகம் என்ற வகையில் நாம் எமது கடந்த கால வாழ்வியல் முறைமைகள் குறித்தும், அவை பற்றிய மதிப்பீடுகளை மேற்கொண்டும் முன் செல்வதற்கான வெளிகளைத் திறந்துள்ளது எனலாம்.

குறிப்பாக காலனித்துவமும் நவீனமயமாக்கமும் மூடநம்பிக்கைகள், காலத்திற்கு ஒவ்வாதவை எனத் தட்டிக்கழித்த நமது உள்ளூர் பொருளியல் பண்பாடுகள் குறித்தும், நமது உள்ளூர் அறிவு முறைமைகள் பற்றியும் கவனத்திற் கொண்டு நமது எதிர்கால வாழ்வியல் முறைமைகளை வடிவமைப்பதற்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன எனலாம்.

• • •

## அன்று அவர் .... தொடர்ச்சி..

அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம், பதினைந்து வருட சிறைவாசம், எல்லாம் கடந்தும் சமத்துவமான தேசம் படைக்கும் கன வைச் செதுக்கிச் செதுக்கி நன வாக்கிய தலைவர், அவரைச் சுற்றி நடந்த சதிவலைகளையும், அவருக்கே பிடித்த சுருட்டுக்குள்ளேயும், அவரின் காதலியை வைத்தே முயற்சித்ததும் உள்ளடங்கலான அறுநூற்று முப்பத்தெட்டு கொலை முயற்சிகளையும் தாண்டி வந்த தனித்துவமிக்க சாகசத் தலைவர்!

கல்வி ஒன்றே உயர்கட்டுமானமென்றும், பொருளாதார நிமிர்வே சமூகத்தை மேம்படுத்தும் என்றும் கனவுகண்ட தலைவனால் உருவான தேசத்து மக்கள், இன்று உலகுக்கு ஒரு கேடு என்றதும், தங்கள் தலைவனின் நிழற்படத்தையும் தாங்கியபடி தவிக்கும் உலகுக்கே மருந்தாக தங்கள் தலைவனின் பெருமையை உலகறியச் செய்திருக்கிறார்கள்,

**இப்போது எங்களின் முன்னால் எழுகின்ற மானசீகமான கேள்வி ஒன்றே ஒன்றுதான்! எத்தனையோ இடர்களைச் சுமந்து எங்களுக்கோர் அடையாளம் தந்து எங்களை இதுவரை வாழவைத்த எங்கள் தலைவனின் பெருங்கனவை உலகறிய எப்போது நாம் ஈடேற்றிக் கொள்வோம்?**

**-காந்தள்-**

*24/03/2020*

(பிற்குறிப்பு:- தமிழீழத்தின் போராற்றலை மௌனிக்கச்செய்த இறுதியுத்தத்தில், எதிரியோடு கைகோர்த்து நின்ற நாடுகளுள் கியூபாவும் இணைந்து நின்றது எனும் ஏற்கமுடியாத உண்மையினால் மனம் வருந்தியவர்களுள் நானும் ஒருவன்)

## மாபெரும் .... தொடர்ச்சி..

அதன் தென்னாசிய பிராந்திய பணிப்பாளர் மினாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றவாளி என ஐ.நாவினால் அடையாளம் காணப்பட்ட சவீந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக சிறீலங்கா அரசு நியமித்திருந்தது. அவர் மீது அமெரிக்கா பயணத் தடையை கொண்டு வந்திருந்தது. எனினும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மற்றுமொரு படை அதிகாரியான காமால் குணரட்னாவை கோத்தபாய பாதுகாப்புச் செயலாளராக நியமித்திருந்தார்.

இவர்கள் இருவருமே தற்போது கொரோனா வைரஸ் தொடர்பான நடவடிக்கைக் குழுவை வழிநடத்துகின்றனர். சிறீலங்காவில் நீதியை நிலைநாட்டுவதற்கு அனைத்துலக நீதி விசாரணைப் பொறிமுறை தேவை என்பது தற்போது தெளிவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கோவிட்-19 .... தொடர்ச்சி..

92,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கு அடுத்த நிலையில் ஸ்பெயின் உள்ளது. அங்கு இதுவரையிலும் 5,812 பேர் மரணமடைந்துள்ளனர், 72,200 பேர் பாதிக்கப் பட்டு ள்ளனர்.

நேற்று ஸ்பெயினில் 832 பேரும், இத்தாலியில் 889 பேரும், பிரித்தானியாவில் 260 பேரும், பிரான்ஸ் இல் 319 பேரும் மரணமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் இதுவரையில் 1,700 பேர் மரணமடைந்துள்ளதுடன், 115,547 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் இல் 2,314 பேர் மரணமடைந்துள்ளதுடன், 37,575 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகில் இதுவரை 649,904 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், அவர்களில் 137,283 பேர் குணமடைந்துள்ளனர்.

## தமிழ் அரசியல் .... தொடர்ச்சி..

பாகிஸ்தான் மற்றும் ஆப்பாகானிஸ்தான் நாடுகளும் கைதிகளை விடுவித்துள்ளன.

சிறைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பிரித்தானிய அரசும் சிந்தித்து வருகி ன்றது.

எனவே சிறீலங்கா அரசினால் எந்த வித குற்றமும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலு த்துள்ளன.

இந்த விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் சிறீலங்கா அரசுக்கும் அனைத்துலக சமூகத்திற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## இனப்படுகொலை.... தொடர்ச்சி..

வெளியிட்டதும், தற்போதைய கொரோனா வைரசின் பிரச்சனையை சிறீலங்கா அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருவதாக அவை குற்றம் சுமத்தியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்கா .... தொடர்ச்சி..

அனைத்துலக சட்டங்களில் மன்னிப்புக்கள் வழங்கப்படுவதில்லை. மக்கள் கொரோனா வைரஸ் இன் தாக்கம் தொடர்பான அச்சத்தில் உள்ள போது அவர்களின் மனங்களை மேலும் பாதிக்கும் வண்ணம் இந்த விடுதலை அமைந்துள்ளது.

சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தனக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளது சிறீலங்கா அரசு. தான் அரச தலைவராக பதவியேற்றால் படையினர் எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற தனது உறுதிமொழியை தங்போதைய அரச தலைவர் நிறைவேற்றியுள்ளார். சிறீலங்கா அரசின் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆண்களை குறிவைத்துக் கொல்லும் கொரோனா



உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் ஆண்களையே அதிகம் பாதித்து வருவதுடன், ஆண்களே அதிகம் மரணமடைந்தும் வருகின்றனர்.

இதுவரை கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இறந்தவர்களில் சீனாவில் 64 விகிதமும், இத்தாலியில் 71 விகிதமும், ஸ்பெயினில் 65 விகிதமும் ஆண்களாகும்.

இதற்கான காரணம் என்ன என்பதே தற்போதைய கேள்வி?

இரு தரப்பினரினதும் வாழ்க்கை முறை முக்கிய காரணம் என முன்வைக்கப்படுகின்றது.

பெண்கள் அதிகமாக கை கழுவுவது, ஆண்கள் அதிகமாக புகைப்பிடிப்பது, மது அருந்துவது மற்றும் அதிகம் வெளியில் செல்வது போன்ற காரணிகள் முன்வைக்கப்பட்டதுடன், பெண்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் எனவும் கூறப்படுகின்றது.

## கொரோனா அனர்த்தம் – மனநிலையை தக்கவைப்பது எப்படி



தற்போது கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் உலகின் உள்ள சனத்தொகையில் மூன்றில் இரு பகுதி மக்கள் வீடுகளில் அடைபட்டுள்ளனர்.

தற்போதைய இந்த நிலை மக்களின் மனநிலையில்அதிகபாதிப்புக்களைஏற்படுத்தலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது. மேலும் ஏற்கனவே மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் அதிகம் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இந்த நிலையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் பி.பி.சி ஊடகம் வெளியிட்டுள்ள தகவல்கள்.

உங்களின் மனிநிலைய பாதிக்கும் தகவல்களை பார்ப்பதை அல்லது கேட்பதை தவிர்க்கவும்.

செய்திகளை பார்க்கும் நேரங்களையும் நீங்கள் தீர்மானிக்கவும்

சமூகவலைத் தளங்களில் இருந்து விலகி இருங்கள், உங்களின் மன நிலையை பாதிக்கும் தகவல்களை தவிருங்கள்.

மக்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருங்கள்

## கொரோனாவை கண்டறியும் பணிக்கு நாய்கள்



கொரோனா வைரஸ் தொற்றதலுக்கு உட்பட்டவர்களை கண்டறியும் பணிக்கு நாய்களுக்கு பயிற்சி அளிப்பது தொடர்பில் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உதவி நிறுவனம் ஒன்று நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

மனிதர்களின் சிறந்த நண்பனான நாய் இந்த நோயிலிருந்து மனிதர்களைகாப்பாற்றும் என நம்பப்படுகின்றது. மலேரியா நோயாளிகளை தனது மோப்ப சக்தியால் கண்டறியும் நாய் கோவிட்-19 வைரஸ் நோயாளிகளையும் கண்டறியலாம் என நம்புவதாக லண்டன் மருத் துவக் கல்லூரி மற்றும் ட்றம்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்ளர்கள் கருதுகின் றனர்.

இந்த ஆய்வுக்குழு முன்னர் புற்றுநோயாளிகள், நரம்புத்தளர்ச்சி நோயாளிகள் மற்றும் பக்ரீரியா கிருமிகள் தாக்கியவர்கள் போன்றவர்களை கண்டறியும் பணிக்கு நாய்களுக்கு பயிற்சி அளித்திருந்தது.

மனிதர்களை அவதானிக்கும் நாய், அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமா இல்லையா என்பதை தெரியப்படுத்தும் என இந்த குழுவின் தலைவர் கிளையா கெஸ்ட் தெரிவித்துள்ளார்.

## கோவிட்–19 வைரசை பரப்பிய மிருகம் எது?



பங்கோலின் (pangolins) எனப்படும் ஒரு வகை எறும்பு உண்ணி காட்டு விலங்கில் இருந்தே கொரோனா வைரஸ் பரவியுள்ளதாக த நேச்சர் என்ற உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான பத்திரிகை கடந்த வியாழக்கிழமை (26) தெரிவித்துள்ளது.

எறும்புகளை உணவாக உட்கொள்ளும் பூனையின் அளவைக் கொண்ட இந்த விலங்குகளில் சில கொரோனா வைரஸ் கிருமிகளை காவிச் செல்பவை.

பொதுவாக கொரோனா மற்றும் சார்ஸ் வைரஸ் வகைகளை வெளவால்கள் தான் காவிச் செல்வதுண்டு ஆனால் இந்த விலங்கும் அவற்றை காவும் தகமை கொண்டது.

எனவே தற்போதைய வைரஸின் தோற்றம் இந்த விலங்கின் மூலமே வந்திருக்கலாம் எனவே இந்த விலங்கை வேட்டையாடுவது மற்றும் உணவுக்கு பயன்படுத்துவதை தடை செய்தால் எதிர்காலத்தில் அனர்த்தங்களை தவிர்க்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலங்கு ஆபிரிக்கா மற்றும் ஆசியா நாடுகளில் வாழ்கின்றது.

## விரைவான நடவடிக்கை மூலம் 40 மில்லியன் மக்களை காப்பாற்றலாம்



உலகில் வாழும் 40 மில்லியன் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் எனில் விரைவான நடவடிக்கை தேவை என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலகப் புகழ் பெற்ற இம்பீரியல் கல்லூரி தனது ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அது தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் ஒன்றுமே செய்யாது விட்டால் ஒரு வருடத்திற்குள் 40 மில்லியன் மக்களின் மரணத்தையே காண்போம். ஆனால் நாம் தனிமைப்படுத்தப்பட்டு மக்களிடம் இருந்து விலகியிருந்தால் இந்த எண்ணிக்கை அரைப்பங்காக குறையும்.

விரைவான பரிசோதனை, தனிமைப்படுத்துதல், விரைவான சிகிச்சை என்பவற்றின் மூலம் கணிசமான மக்களைக் காப்பாற்ற முடியும். இந்த வைரசின் தாக்கத்தால் அபிவிருத்தியடையும் நாடுகளே அதிக பாதிப்புக்களை சந்திக்கவுள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு டொலரில் கோவிட்–19 கண்டறியும் சாதனம்

பிரித்தானியா மற்றும் செனகலில் கூட்டாக தயாரிக்கப்படும் கொரோனா வைரஸ் கண்ட றியும் சதானம் எதிர்வரும் ஜூன் மாதம் ஆபிரிக்க நாடுகளில் பரிசோதனை செய்யப்படவுள்ளது.

உற்பத்தி விலைக்கே விற்பனை செய்வதால் அதனை 1 டொலருக்கு வாங்க முடியும். வீடுகளில் இருந்து பயன்படுத்தும் இந்த சாதனம் 10 நிமிடங்களில் பரிசோதனை முடிவை தரும்.

தற்போது அதனை பரிசோதனை இறுதிக்கட்ட பணிகள் இடம்பெறுவதாக பாஸ்ரர் நிறுவனத்தின் பணிப்பாளர் அமாடு சால் தெரிவித்துள்ளார். மஞ்சள் காமாலை மற்றும் டெங்கு காய்ச்சல்களுக்குரிய தடுப்பு மருந்து தயாரிப்பதில் இந்த நிறுவனமே ஈடுபட்டிருந்தது.

## ஆளில்லாத விமானங்கள் மூலம் கிருமிகொல்லி தெளிப்பு



பரவிவரும் கொரோனா வைரசை அழிப்பதற்கு ஆளில்லாத விமானங்கள் மூலம் கிருமிகொல்லிகளை தெளிக்கும் நடவடிக்கைகளை இந்தோனேசியா மேற்கொண்டுள்ளது.

யோஜகத்தா நகரில் உள்ள மக்களின் வாழ்விடங்கள் மீது இந்த கிருமிகொல்லி வானில் இருந்து தெளிக்கப்படுகின்றது. விவசாய நிலங்களில் கிருமிகொல்லி தெளிக்கப்படும் தொழில்நுட்பத்தை இந்தோனேசியா தற்போது மக்கள் மீது மேற்கொண்டு வருகின்றது.